*1994 நவம்பர் 9*]

**திரு. ஜி. பழனிசாமி:** நானும் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உறுப்பினர் அதை ஏன் எதிர்த்தார்கள் என்று தெரிகிறதா? அடுத்து ஒரு சட்டமுன்வடிவு வருகிறது.

### (உ) நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1994.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. அ. செல்வராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையும் வேண்டுமானால் எதிர்க்கிறேன் என்று சொல்லுங்கள். அப்போது அதை எதிர்த்தீர்கள். அது என்ன ஆனது? (குறுக்கீடு) சரி, இதையும் எதிர்க்கிறீர்கள். அப்படித்தானே?

**திரு. அ. செல்வராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லையென்று தெரிகிறது.

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95-பொது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1994-95-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95--ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை மதிப்பீடுகளை இந்த மன்றத்தின் முன்னே வைத்து, ரூ. 494,15 கோடி நிதியொதுக்கத்திற்கு வகை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், அவசரச் செலவுகள் குறித்த சில இனங்களுக்கு எதிர்பாராச்